# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

www.dhinathdhalam.com

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., DHINATH DHALAM Tamil & English daily Paper நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 149 | புதன்கிழமை Wednesday | 26.08.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode


# குளிர்சாதன மின்சார பேருந்துகளின் சேவை



## முதலமைச்சர் விஜய் தொடங்கி வைத்தார்

சென்னை: ரூ. 290.08 கோடி செலவிலான 250 புதிய பேருந்துகளின் சேவையை தமிழ்நாடு முதலமைச்சர் விஜய் (ஆகஸ்ட் 25) கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்.

சென்னை தலைமைச் செயலகத்தில், போக்குவரத்துத் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் முதலமைச்சர் ஜோசப் விஜய் இன்று மாநகர் போக்குவரத்துக் கழகம் மற்றும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களின் சார்பில் 290 கோடியே 8 லட்சம் ரூபாய் மதிப்பிலான 250 புதிய பேருந்துகளின் சேவையைப் பொதுமக்களின் பயன்பாட்டிற்காகக் கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்.

சென்னையில் சுற்றுச்சூழல் மாசுபாட்டைக் குறைக்கும் வகையில், மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில், 697 கோடி ரூபாய் மதிப்பில் 625 தாழ்தள மின்சாரப் பேருந்துகள் ஐந்து பணிமனைகள் மூலம் தற்போது இயக்கப்பட்டு வருகின்றன. இதனைத் தொடர்ந்து, 1,337 கோடி ரூபாய் மதிப்பிலான 750 புதிய தாழ்தள குளிர்சாதன மின்சாரப் பேருந்துகள் 7 பணிமனைகள் மூலம் இயக்க போக்குவரத்து கழகம் சார்பில் திட்டமி டப்பட்டது.

அதன் முதற்கட்டமாக முதலமைச்சர் விஜய் 234 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பிலான 130 புதிய தாழ்தள குளிர்சாதன மின்சாரப் பேருந்துகளின் சேவை இன்று தொடங்கி வைத்தார்.

இதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களில் 756 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 1,614 புதிய பேருந்துகள் இயக்கிடத் திட்டமிடப்பட்டு, 6 தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள் சார்பில் முதற்கட்டமாக 55 கோடியே 58 லட்சம் ரூபாய் செலவில் 120 புதிய பேருந்துகளின் சேவையையும் முதலமைச்சர் விஜய் தொடங்கி வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில், போக்குவரத்துத் துறை அமைச்சர் விஜய் தமிழன் பார்த்திபன், தலைமைச் செயலாளர் சாய்குமார், போக்குவரத்துத் துறை செயலாளர் இல. நிர்மல்ராஜ், சென்னை மாநகர் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் த.மோகன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# “மூன்று தமிழர்களின் மரணத்துக்கு நீதி கிடைக்க அரசு முழு முயற்சி எடுக்க வேண்டும்” எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி வலியுறுத்தல்



சென்னை: "கர்நாடகாவில் சுட்டுக்கொல்லப்பட்ட மூன்று தமிழர்களின் மரணத்துக்கு நீதி கிடைக்க தமிழக அரசு முழு முயற்சி எடுக்க வேண்டும். அவர்கள் குடும்பத்துக்குத் தேவையான நிதியுதவியையும், சட்ட உதவியையும் அரசு செய்ய வேண்டும்" என சட்டப்பேரவையில் இன்று எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் வலியுறுத்தினார். சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் பேசுகையில், "கர்நாடகா மாநிலத்தில், ஹனூர் அருகே அந்தோணிசாமி, ஜான் ரோஸ் பீட்டர், குமார் ஆகிய மூன்று தமிழர்கள் அந்த மாநில வனத்துறையினரால் கடந்த 15-ம் தேதி அதிகாலையில் சுட்டுக் கொல்லப்பட்டு உள்ளார்கள்.

அதை, ஏற்கெனவே, இந்த அவையின் கவனத்துக்கு எடுத்து வந்துள்ளோம்.

சுட்டுக்கொல்லப்பட்ட அந்த மூன்று தமிழர்களின் உடற்கூறு ஆய்வறிக்கை இன்று வெளிவந்துள்ளது. அதில் மூன்று பேருமே சித்திரவதை செய்யப்பட்டு, மிக அருகில் நிற்க வைக்கப்பட்டு, சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்கள் என்று அந்த உடற்கூறு ஆய்வறிக்கை மூலமாக தெரிய வந்துள்ளது.

மூன்று பேருக்கும் உடல் முழுக்க படுகாயம் இருந்திருக்கிறது. விலா எலும்பு முறிக்கப்பட்டுள்ளது என்று போஸ்ட்மார்ட்டம் ரிப்போர்ட் தெளிவாகச் சொல்கிறது. எனவே, இது முழுக்க முழுக்க ஒரு படுகொலை. இந்தப் படுகொலைக்கு எதிராக இந்த ஆட்சி என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகின்றேன்.

குறைப்பட்சம் அந்த மாநில அரசிடம் விளக்கம் கேட்டு கடிதம் எழுதியிருக்கிறதா? கடந்த வாரம், கர்நாடகா முதல்வர் தென் மாநில முதல்வர் மாநாட்டுக்காக இங்கு வந்தார். அப்போது நேரிலாவது தமிழக அரசு, தன் கண்டனத்தைத் தெரிவித்திருக்கிறதா?

கர்நாடக மாநில காவல்துறைக்குப் பதிலாக, ஒரு மேல்மட்ட நீதி விசாரணை செய்ய தமிழக அரசு வலியுறுத்த வேண்டும் என்று, இந்த அவையில் ஏற்கெனவே வலியுறுத்தியுள்ளேன். அது சம்பந்தமாக இந்த மாநில முதல்வரால் ஏதாவது அழுத்தம் கொடுக்கப்பட்டதா?

இந்தப் பிரச்சினை நடந்தவுடன் முதல்வரோ, அமைச்சரவையில் இருப்பவர்களோ, கர்நாடகா சென்று, இறந்தவர்களின் குடும்பத்துக்கு ஆறுதல் சொல்லியிருக்க வேண்டும். மூன்று தமிழர்களின் மரணத்துக்கு நீதி கிடைக்க தமிழக அரசு முழு முயற்சி எடுக்க வேண்டும். அவர்கள் குடும்பத்துக்குத் தேவையான நிதியுதவியையும், சட்ட உதவியையும் அரசு செய்ய வேண்டும் என்று உங்கள் கவனத்துக்குக் கொண்டு வருகிறேன்"

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.












மதுரை காமராஜர் சாலையில் அன்னை சந்திரமதி திருமண மஹால் திறப்பு விழா பிரம்மாண்டமாக நடைபெற்றது. இதில்தெற்குசட்டமன்றஉறுப்பினர்கோபிஷன்அவர்கள்கலந்துகொண்டுமண்டபத்தைதிறந்துவைத்தார்இந்நிகழ்வில் அரசியல் பிரமுகர்கள் தொழிலதிபர்கள் நண்பர்கள் உறவினர்கள் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டு வாழ்த்து தெரிவித்தனர் உரிமையாளர்கள் டத்தோ பாஸ்கரன் டத்தின் புஷ்பவள்ளி ஆகியோர் வருகை தந்த அனைவரையும் வரவேற்று சிறப்பித்தனர்



மதுரைநாடாளுமன்றஉறுப்பினர்திரு.சு.வெங்கடேசன்அவர்கள்மாவட்டஆட்சித்தலைவர்திரு.நிஷாந்த்கிருஷ்ணா, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மதுரை மாவட்டம், அரசு இராசாசி மருத்துவமனை வளாகத்தில் பாராளுமன்ற தொகுதி மேம்பாட்டுநிதியின்கீழ்ரூபாய்26லட்சம்மதிப்பீட்டில்புதிதாககட்டப்பட்டுள்ளபொதுமக்கள்காத்திருப்போர்கூடத்தினை திறந்து வைத்தார். மாநகராட்சி மேயர்(பொ)/துணை மேயர் திரு.தி.நாகராஜன் அவர்கள், இராசாசி மருத்துவமனை முதல்வர் மரு. அருள் சுந்தரேஷ்குமார் அவர்கள் ஆகியோர் உடன் உள்ளனர்

# கிரைம் கண்ட்ரோல் சமிதி ஆலோசனைக் கூட்டம்



:புதுடெல்லியைதலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வரும் கிரைம் கண்ட்ரோல் சமிதியின்தமிழகமாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் ஈரோட்டில் உள்ள அலுவலகத்தில் நடைபெற்றது.

மருத்துவ அணித் தலைவர் செல்ல குமாரசாமி தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், மாநில நிர்வாகிகள் ராஜேந்திரன், வாசுதேவன் முன்னிலைவகித்தனர். ஒருங்கிணைப்பாளர் ஞானசேகர் வரவேற்றார்.

சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட தேசிய துணைத் தலைவர் அக்பர் அலி, தேசிய, மாநில மற்றும் மாவட்ட அளவிலானநிர்வாகிகள்தேர்வு, புதிய உறுப்பினர் சேர்க்கை உள்ளிட்ட அமைப்பின் செயல்பாடுகள் குறித்து சிறப்புரையாற்றினார். தொடர்ந்து புதிய உறுப்பினர்களுக்கு உறுப்பினர் படிவங்கள் வழங்கப்பட்டன.

மாநிலச் செயலாளர் பூங்குன்றன், மாநில மற்றும் மாவட்ட அளவிலான எதிர்கால செயல்திட்டங்கள் குறித்து விளக்கிப் பேசினார்.

புதிய பொறுப்பாளர்கள்: சேலம் மாவட்ட பொறுப்பாளராக வழக்கறிஞர் சபரி பிரகாஷ், நாமக்கல் மாவட்ட பொறுப்பாளராக சங்கீதா, ஈரோடு மாவட்ட பொறுப்பாளராக குமார் என்கிற செல்லத்துரை, திருப்பூர் மாவட்ட பொறுப்பாளராக சதீஷ்குமார் ஆகியோர் நியமிக்கப்பட்டனர். மாநில நிர்வாகிகளாக உதயகுமார், விஜய், அசோக் ஆகியோர் நியமிக்கப்பட்டனர்.

சேலம்மண்டலஒருங்கிணைப்பாளர் நிசாமுதீன் நன்றி கூறினார். நிர்வாகிகள் சக்தி, லட்சுமண செட்டி, பிரபு, சுல்தான், சிவக்குமார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியை ஒருங்கிணைப்பாளர் பாலாஜி ஒருங்கிணைத்தார்.



திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை வட்டம், சீவலப்பேரி கிராமத்தில் (25.08.2026) நடைபெற்ற மக்கள் தொடர்பு திட்டம் முகாமில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஆனந்த் மோகன், பல்வேறு அரசுதுறைகள்சார்பாக76பயனாளிகளுக்குரூ.11.31இலட்சம்மதிப்பிலானஅரசுநலத்திட்டஉதவிகளைவழங்கினார்கள். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.ச.வித்யா அவர்கள், வருவாய் கோட்டாட்சியர் திருமதி.மோ.பிரியா அவர்கள் உட்பட பலர் உள்ளார்கள்.

# செங்கோட்டை பாரத் கேஸ் ஏஜென்சியில் சிலிண்டர் விநியோகத்தில் தாமதம்? பொதுமக்கள் குற்றச்சாட்டு




தென்காசி மாவட்டம் செங்கோட்டையில் செயல்பட்டு வரும் பாரத் கேஸ் ஏஜென்சியில் 25,000க்கும் மேற்பட்ட வாடிக்கையாளர்கள் உள்ள நிலையில், சிலிண்டர் முன்பதிவு செய்தும் பல நாட்களாகியும் வீடுகளுக்கு சிலிண்டர் விநியோகம் செய்யப்படவில்லை என பொதுமக்கள் குற்றச்சாட்டு தெரிவித்துள்ளனர்.

வாடிக்கையாளர்கள் ஆன்லைன் மூலம் சிலிண்டர் முன்பதிவு செய்து, அதற்கான தொகையையும் செலுத்திய பின்னரும் 1 முதல் 20 நாட்கள் வரை சிலிண்டர் கிடைக்காமல் காத்திருப்பதாக கூறப்படுகிறது.

இதுகுறித்து வாடிக்கையாளர்கள் ஏஜென்சிக்கு நேரில் சென்று கேட்டபோதும், சிலிண்டர் ஏன் தாமதமாகிறது என்பதற்கு உரிய விளக்கம் வழங்கப்படவில்லை எனவும் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் சமையல் எரிவாயு சிலிண்டரை நம்பியுள்ள குடும்பங்கள் பெரும் சிரமத்திற்கு உள்ளாகி வருவதாகவும், உடனடியாக சிலிண்டர் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேலும், அதிக எண்ணிக்கையிலான வாடிக்கையாளர்களை ஒரே ஏஜென்சி நிர்வகிப்பதால் விநியோகத்தில் சிக்கல் ஏற்படுகிறதா?

என்பதை மாவட்ட நிர்வாகமும், சம்பந்தப்பட்ட எண்ணெய் நிறுவன அதிகாரிகளும் ஆய்வு செய்ய வேண்டும் என பொதுமக்கள் வலியுறுத்தியுள்ளனர்.

எனவே,செங்கோட்டை பாரத் கேஸ் ஏஜென்சியின் செயல்பாடுகளை மாவட்ட நிர்வாகம் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஆய்வு செய்து, உண்மை நிலையை கண்டறிந்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேலும், பொதுமக்களுக்கு சீரான முறையில் சமையல் எரிவாயு சிலிண்டர் கிடைக்கும் வகையில், தேவையானால் விநியோகப் பகுதிகளைப் பிரித்து கூடுதல் கேஸ் ஏஜென்சி ஏற்படுத்தி தர வேண்டும் எனவும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வாடிக்கையாளர்களின் புகார்களுக்கு உடனடி தீர்வு காணப்பட்டு, முன்பதிவு செய்த சிலிண்டர்களை தாமதமின்றி வழங்க மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்குமா?

என்பதே பொதுமக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.



மாவட்ட ஆட்சியர்.ரஞ்ஜீத் சிங், 25.8.2026 புதிதாக கட்டப்பட்டுள்ள கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றிய அலுவலக கட்டிடத்தினை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

# எஸ். வீராசாமி செட்டியார் பொறியியல் மற்றும் பாலிடெக்னிக் கல்லூரியில் மாபெரும் வேலைவாய்ப்பு முகாம்



தென்காசி மாவட்டம் புளியங்குடி அருகே அமைந்துள்ள எஸ். வீராசாமி செட்டியார் பொறியியல் மற்றும் பாலிடெக்னிக் கல்லூரியில் இறுதியாண்டு மாணவர்களுக்கான மாபெரும் வேலைவாய்ப்பு முகாம் நடைபெற்றது.

இந்த வேலைவாய்ப்பு முகாமில் இந்தியாவின் முன்னணி நிறுவனங்களான MARELLI, MOTHERSON THERMAL SOLUTIONS, WIPRO INFRASTRUCTURE ENGINEERING உள்ளிட்ட நிறுவனங்கள் பங்கேற்று மாணவர்களுக்கான நேர்முகத் தேர்வை நடத்தின.

எஸ்.வீராசாமி செட்டியார் கல்விக் குழுமங்களின் தலைவர் டாக்டர் முருகையா மற்றும் செயல் இயக்குனர் விக்னேஷ் வீராசாமி ஆகியோரின் அறிவுறுத்தலின்பேரில், பொறியியல் கல்லூரி முதல்வர் டாக்டர் மணிகண்டன் தலைமையில், பாலிடெக்னிக் கல்லூரி முதல்வர் இசக்கிமுத்து முன்னிலையில் வேலைவாய்ப்பு தேர்வு நடைபெற்ற முகாமில்

பொறியியல் மற்றும் பாலிடெக்னிக் கல்லூரிகளைச் சேர்ந்த சுமார் 180 மாணவர்கள் கலந்து கொண்டனர். அவர்களில் பொறியியல் கல்லூரியைச் சேர்ந்த 45 மாணவர்களும், பாலிடெக்னிக் கல்லூரியைச் சேர்ந்த 32 மாணவர்களும் என மொத்தம் 77 மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.

தேர்வு செய்யப்பட்ட மாணவர்களுக்கு ஆண்டுக்கு ரூ.2.75 லட்சம் ஊதியம் வழங்கப்படும் என தெரிவித்து

வேலைவாய்ப்பு ஆணைகள் வழங்கி,கல்லூரி முதல்வர்கள் வாழ்த்துத் தெரிவித்தனர். வேலைவாய்ப்பு முகாமிற்கான ஏற்பாடுகளை எஸ். வீராசாமி செட்டியார் கல்விக்குழுமங்களின் மேலாளர் தங்கப்பன் பிள்ளை, பொறியியல் கல்லூரி வேலைவாய்ப்பு அலுவலர்கோமதிசங்கர்,பாலிடெக்னிக் கல்லூரி வேலைவாய்ப்பு அலுவலர் பரமசிவன் மற்றும் ஆசிரியர்கள் செய்திருந்தனர்.

# சர்வதேச கொபுடோ கட்டா செமினாரில் கோவை கராத்தே மாஸ்டர் சிஹான் ஜெமிஷா தேர்வு



சென்னையில் ரியூ கியூ கொபுடோ ஷிம்புகான் இந்தியா சார்பில் இண்டர்நேஷனல் அளவிலான கொபுடோ கட்டா செமினார் குயின் மேரீஸ் கல்லூரியின் பொன்விழா உள் விளையாட்டு அரங்கில் நடைபெற்றது. இந்த செமினாரில் போ கட்டா.சாய் கட்டா.நுன்சாக் கட்டா.டோன்போ கட்டா.ஆகிய கொபுடோ கலைப் பயிற்சிகள் அளிக்கப்பட்டன. இதில் தெற்காசிய ரென்சி டாக்டர் கொபுடோ கிருஷ்ணமூர்த்தி ஒகினோவா ஜப்பான் மாஸ்டர் காட்சுரோ அகமைன். சுவிட்சர்லாந்து மாஸ்டர் .டெல் ஹேம்பி.ஆகியோர் கொபுடோ பயிற்சிகளை அளித்தனர் இந்த செமினாரில் இந்திய ஜப்பான் சுவிட்சர்லாந்து கென்யா இலங்கை ஆகிய நாடுகளைச் சேர்ந்த சீனியர் கராத்தே மாஸ்டர்கள் உட்பட 350க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர் இப்பயிற்சியில் கலந்து கொண்டு தேர்ச்சி பெற்ற கோவை கராத்தே மாஸ்டர் சிஹான் ஜெமிஷா அவர்களுக்கு தருமபுரி சட்டமன்றத் உறுப்பினர் சௌமியா அன்புமணி சான்றிதழ் மற்றும் நினைவு பரிசு வழங்கி வாழ்த்தி பாராட்டினார் இந்நிகழ்ச்சியில் குயின் மேரீஸ் கல்லூரியின் உடற்கல்வித் துறை த் தலைவர் மற்றும் இயக்குநருமான டாக்டர் சுஜிதா சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார்.



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் பார்சலில் போதைப் பொருள்கள் வருவது தொடர்பாக கூரியர் சேவை நிறுவனங்கள் மற்றும் தடைசெய்யப்பட்ட போதைப்பொருள்கள் விற்பனை செய்வதை தடுப்பது தொடர்பாக அனைத்து வணிக சங்கத்தினர்களுக்கான கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி அறிவுறுத்தலின் படி (24.08.2026) அன்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கிரண் ஸ்ருதி , உதவி ஆணையர் (கலால்) கோகிலா, மாவட்ட உணவு பாதுகாப்பு மற்றும் நியமன அலுவலர் வரலட்சுமி உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளனர்.



★இலஞ்சி TDTA DS டேனியல் ராஜம்மாள் கல்வியியல் கல்லூரியில் பள்ளி கல்வித் துறையின் சார்பில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கு இடையிலான மாவட்ட அளவிலான இளையோர் திறன் 2026 2027 கலைத்திருவிழா போட்டிகளை மாவட்ட ஆட்சியர் திரு.ரஞ்ஜீத் சிங், குத்து விளக்கேற்றி துவக்கி வைத்தார்.



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற கல்விக்கடன் முகாமில் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, மாணவ, மாணவியர்களுக்கு கல்விக்கடனுதவிகளை நேற்று (25.08.2026) வழங்கினார். உடன் முன்னோடி வங்கி மேலாளர் (கனரா வங்கி) விவேகானந்தன் உட்பட பலர் உள்ளனர்.

# கோவை சஹோதயா பள்ளிகள் கூட்டமைப்பின் சார்பாக கோவையில் நடைபெற்ற தடகளப் போட்டிகளில் ஸ்டேன்ஸ் பள்ளி மாணவ, மாணவிகள் சாதனை

கோவை சஹோதயா பள்ளிகள் கூட்டமைப்பின் சார்பாக, 10-வது வருடாந்திர விளையாட்டுப் போட்டிகள், கோவை வ உ சி பூங்கா மைதானத்தில் நடைபெற்றது. இதில் ஸ்டேன்ஸ் பள்ளி மாணவ, மாணவிகள் சாதனை படைத்துள்ளனர்.தடகளப்போட்டியில் இப்பள்ளியின் மாணவ, மாணவியர்கள் சிறப்பானதனிநபர்செயல்பாடுகளை வெளிப்படுத்தினர்.




12 ஆம் வகுப்பைச் சேர்ந்த நினாத், 19 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் 1,500 மீட்டர் மற்றும் 800 மீட்டர் ஓட்டம் ஆகிய இரண்டு போட்டிகளிலும் வெற்றி பெற்று சாதனை படைத்தார். 12 ஆம் வகுப்பைச் சேர்ந்த ஆஸ்வின் சாமுவேல்,19 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் 100 மீட்டர் மற்றும் 200 மீட்டர் ஓட்டப் போட்டிகளிலும் சாதனை படைத்தார். 11 ஆம் வகுப்பைச் சேர்ந்த ஜோஷிதா ஐயர், 19 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் வட்டு எறிதல் போட்டியில் வெற்றி பெற்றதுடன்,ஈட்டி எறிதலில் மூன்றாம் இடத்தைப் பிடித்தார். 12 ஆம் வகுப்பைச் சேர்ந்த ஹரிணி, 19 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் உயரம் தாண்டுதல் போட்டியில் சாதனை படைத்து வெற்றி பெற்றதுடன், 100 மீட்டர் தடை தாண்டும் போட்டிகளிலும் வெற்றி பெற்றார். அதோடுதனது சிறப்பான செயல்பாட்டிற்காகதனிநபர் சாம்பியன்ஷிப் விருதையும் அவர் பெற்றார். 11 ஆம் வகுப்பைச் சேர்ந்த கிரேஸ் ஏஞ்சல், 19 வயதுக்குட்பட்டோர் பிரிவில் நீளம் தாண்டுதல் போட்டியில் முதலிடம் பிடித்து புதிய சாதனையை நிகழ்த்தினார்.

இப்பள்ளியின் தடகள வீரர்கள் சிறப்பான ஆட்டங்கள் மூலம் 19 வயதுக்குட்பட்டோர் பிரிவில் ஆண்கள் மற்றும்பெண்கள் இரு பிரிவுகளிலும் 'ஒட்டுமொத்த சாம்பியன்' பட்டத்தை வென்று அசத்தியது. இந்தச் சாதனை, மாணவர்கள் மற்றும் பயிற்சியாளர்களின் கடின உழைப்பை வெளிப் படுத்தியது.

வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளை பள்ளி நிர்வாகம்

பாராட்டி கௌரவித்தது. மேலும் பள்ளியின் முதல்வர் ஐலீன் ஜெத்ரோ, ஸ்டேன்ஸ் பள்ளிக்குப் பெருமை சேர்த்த இளம் விளையாட்டு வீரர்கள், பயிற்சியாளர்கள் மற்றும் உடற்கல்வி ஆசிரியர்களுக்கு வாழ்த்துகளை தெரிவித்துடன் வெற்றி பெற்றவர்களுக்குப் பதக்கங்கள் மற்றும் கோப்பைகளை வழங்கி பாராட்டினார்.



ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், பணிக்கம்பாளையம் குடியிருப்பு பகுதிகளில் நோய் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பணிகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, நேற்று (25.08.2026) ஆய்வு மேற்கொண்டார்.

# வேப்பூரில் மகளிர் சுயஉதவிக்குழு பேப்பர் பிளேட் தயாரிப்பு நிலையத்தில் ஆட்சியர் ஆய்வு!



கடலூர் மாவட்டம் நல்லூர் வட்டாரம், திருப்பெயர் ஊராட்சியில் மகளிர் சுயஉதவிக்குழுவினர் சார்பில் வேப்பூரில் செயல்பட்டு வரும் பேப்பர் பிளேட் தயாரிப்பு நிலையத்தை மாவட்ட ஆட்சித் தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் நேற்று நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். அப்போது, மகளிர் சுயஉதவிக்கு ழுவினர் மேற்கொண்டு வரும்உற்பத்திப்பணிகள், தொழில் செயல்பாடுகள் மற்றும் வருவாய் நிலவரம் குறித்து கேட்டறிந்தார். தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் கடந்த 2022ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இக்குழுவினருக்கு பல்வேறு சுயதொழில் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், உற்பத்தியாளர் குழு திட்டத்தின் கீழ் ரூ.2 லட்சம் நிதியுதவி வழங்கப்பட்டதன் மூலம் மாவு அரைக்கும் இயந்திரம் வாங்கி தொழில் நடவடிக்கைகளை தொடங்கினர். தொடர்ந்து மஞ்சப்பை தயாரிப்பு, தேசியக்கொடி தைத்தல் உள்ளிட்ட பணிகளில் ஈடுபட்டதுடன்,அங்கன்வாடி குழந்தைகளுக்கான உணவுப் பொருட்களையும் தயாரித்து வழங்கி வருவாய் ஈட்டினர். தொழில் மூலம் கிடைத்த வருவாயை சேமித்து, சுமார் ரூ.5 லட்சம் மதிப்பிலான பேப்பர் பிளேட் தயாரிப்பு இயந்திரத்தை வாங்கி புதிய தொழிலை தொடங்கியுள்ளனர். தற்போது பேப்பர்பிளேட்டுகளை தயாரித்து நல்லூர் மற்றும் விருத்தாசலம் வட்டாரங்களில்உள்ள மொத்த மற்றும் சில்லரை விற்பனையாளர்களுக்கு விற்பனை செய்து வருகின்றனர். மாதத்திற்கு சுமார் ரூ.2 லட்சம் மதிப்பிலான பேப்பர் பிளேட்டுகள் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை செய்யப்படுவதாகவும், இதன் மூலம் குழு உறுப்பினர்கள் தங்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்தி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஆய்வின்போது, பேப்பர் பிளேட் தயாரிப்புக்கான மூலப்பொருட்கள் கொள்முதல், உற்பத்தித் திறன், சந்தை வாய்ப்புகள், விற்பனை மற்றும் தொழிலை விரிவுபடுத்துவதற்கான தேவைகள் குறித்து ஆட்சியர் கேட்டறிந்தார். மகளிர் சுயஉதவிக்கு ழுவினர் தொடர்ந்து சுயதொழிலில் ஈடுபட்டு பொருளாதார ரீதியாக முன்னேற்றம் அடைய அரசு செயல்படுத்தி வரும் திட்டங்களை முறையாக பயன்படுத்திக்கொள்ளுமாறும் அவர் அறிவுறுத்தினார். மாவட்ட ஆட்சியரின் இந்த நேரடி ஆய்வு, மகளிர் சுயஉதவிக்குழுவினரின் தொழில் வளர்ச்சி மற்றும் வாழ்வாதார மேம்பாட்டிற்கு ஊக்கமளிக்கும் வகையில் அமைந்தது.

# கோவை நவ இந்தியா பகுதியில் உள்ள ஸ்ரீ ராமகிருஷ்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் ஓணம் பண்டிகை கொண்டாட்டம் கோலாகலமாக நடைபெற்றது

## கல்லூரி மாணவ, மாணவியர்களின் துள்ளல் நடன நிகழ்ச்சிகள் அனைவரையும் கவர்ந்தது



கோவை நவ இந்தியா பகுதியில் உள்ள ஸ்ரீ ராமகிருஷ்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில், கேரள மாநிலத்தின்பாரம்பரியபண்டிகையான ஓணம் திருவிழா மிகவும் உற்சாகமாகக் கொண்டாடப்பட்டது.

கொண்டாட்டத்தின் முக்கிய சிறப்பம்சங்களாக கல்லூரியின் முதல்வர் மற்றும் செயலர் முனைவர் பி.எல். சிவக்குமார் தலைமை தாங்கி முறைப்படி தொடங்கி வைத்தார். கல்லூரி மாணவ, மாணவிகள் மற்றும் பேராசிரியர்கள் அனைவரும் கேரளாவின் பாரம்பரிய ஆடைகளை அணிந்து வந்து விழாவிற்கு வண்ணம் சேர்த்தனர். தொடர்ந்து மாவேலி மன்னன் வேடமிட்ட மாணவர் ஒருவர், அதிரடி செண்டை மேள முழக்கங்களுடன் கல்லூரி வளாகத்திற்குள் கம்பீரமாக அழைத்து வரப்பட்டார். கல்லூரி வளாகத்தில் மாணவிகள் மற்றும் பேராசிரியைகள் இணைந்து வடிவமைத்திருந்த மிக அழகிய, பிரம்மாண்டமான அத்தப்பூ பூக்கோலம் அனைவரின் கவனத்தையும் ஈர்த்தது. தொடர்ந்து மாணவிகளின் திருவாதிரை கண்களில் நடனத்தை கண்டு ரசித்த நிகழ்வு ஓனம் பண்டிகையின் நம் கண் முன்னே கொண்டு வந்து நிறுத்தியது. மகாபலி மன்னரைப்போல்வேடம் அணிந்திருந்த மாணவர்களுடன் மாணவ மாணவிகள் குழுபுகைப்படம் எடுத்துக்கொண்டனர்.அதனைத்தொடர்ந்து அனைவருக்கும் கேரளா பாரம்பரிய சுவை மிக்க பாயாசம் வழங்கி,ஒருவருக்கொருவர் தங்களது மகிழ்ச்சியை பரிமாறிக் கொண்டனர். பின்னர் மாணவ மாணவியர்களின் கண்கவர் நடன நிகழ்ச்சிகள் நடைபெற்றது. நிகழ்வில் பேராசிரியர்கள், மாணவ மாணவியர்கள், திரளாக கலந்து கொண்டு ஓனம் பண்டிகை கொண்டாடியது கல்லூரியே திருவிழா கோலம் போல காட்சியளித்தது என்பது குறிப்பிடத்தக்கது.

# ஆசிரியர்களின் நீண்டநாள் கோரிக்கைக்கு முக்கிய முன்னேற்றம் பள்ளிக்கல்வி அமைச்சருக்கு ஆசிரியர் சங்க நிர்வாகிகள் வாழ்த்து



தமிழக சட்டப்பேரவையில் 25.08.2026 அன்று நடைபெற்ற கூட்டத்தொடரில், 23.08.2010-க்கு முன்பு பணியில் சேர்ந்தஆசிரியர்களுக்கு ஆசிரியர் தகுதித் தேர்வு (TET) தேவையில்லை என்ற ஒத்த தீர்மானத்தை நிறைவேற்றி, அதனை மத்திய அரசு நாடாளுமன்றத்தில் சட்டத்திருத்தம் செய்து ஏகமனதாக நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தியதற்காக, மாண்புமிகு பள்ளிக்கல்வி அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்களுக்கு தமிழ்நாடு தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளி ஆசிரியர் சங்க நிர்வாகிகள் நேரில் சந்தித்து வாழ்த்து தெரிவித்தனர்.

தமிழ்நாடு தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளி ஆசிரியர் சங்கத்தின் நிறுவனத் தலைவர் சி.சேகர், மாநிலத் தலைவர் தே. ரமேஷ்பாபு, மாநில அமைப்புச் செயலாளர் பெரு. திருநாவுக்கரசு மற்றும் மாநில தலைமை நிலையச் செயலாளர் ஞா. ரவீந்தரன் ஆகியோர் தலைமைச் செயலகத்தில் அமைச்சரை நேரில் சந்தித்து பொன்னாடை அணிவித்து மரியாதை செலுத்தி நன்றியையும் வாழ்த்துகளையும் தெரிவித்தனர்.

ஆசிரியர்களின் நீண்டநாள் கோரிக்கையை கருத்தில் கொண்டு தமிழக அரசு எடுத்துள்ள இந்த நடவடிக்கை, 2010-க்கு முன்பு பணியில் சேர்ந்த ஆயிரக்கணக்கான ஆசிரியர்களுக்கு பெரும் நம்பிக்கையையும் உற்சாகத்தையும் அளித்துள்ளதாக சங்க நிர்வாகிகள் தெரிவித்தனர்.

மேலும், தமிழக சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட இந்த தீர்மானத்தை மத்திய அரசு விரைவில் ஏற்று நாடாளுமன்றத்தில் தேவையான சட்டத் திருத்தங்களை மேற்கொண்டு நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தினர்.



## வள்ளியூரில் விஜயகாந்த்தின் 74வது பிறந்தநாள் விழா

# மாவட்ட செயலாளர் வி.ஜி. வேலாயுதம் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை

புரட்சிக் கலைஞர் கேப்டன் விஜயகாந்த் அவர்களின் 74-வது பிறந்தநாளைமுன்னிட்டு வள்ளியூர் புதிய பஸ் நிலையம் இசக்கியம்மன் திருக்கோவிலில் சிறப்பு பூஜை செய்யப்பட்டு பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டது

அதனைத் தொடர்ந்து வள்ளியூர் பழைய பஸ் நிலையத்தில் அலங்கரித்துவைக்கப்பட்டகேப்டன் விஜயகாந்த் அவரது திருவுருவப்படத்திற்கு மாவட்ட கழக செயலாளர் வி.ஜி வேலாயுதம் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார் மேலும் பொது மக்களுக்கு வேஷ்டி சேலை வழங்கப்பட்டது இந்நிகழ்ச்சியில் மாநில விவசாய அணி துணைச் செயலாளர் ராமச்சந்திரன் மாவட்ட கழக அவை தலைவர் விஜய கணேசன். தெற்கு ஒன்றிய கழகச் செயலாளர் வெள்ளத்துரை ராதாபுரம் கிழக்கு ஒன்றிய கழகச் செயலாளர் இசக்கி முத்து நிர்வாகிகள் எஸ் ஆர்பாபுஜேசுதாஸ்கண்ணன் ரவி அன்பு சுயம்பு ராஜ் பாலச்சந்தர் பாபு கோபி அன்பழகன் முருகன் ஜெயக்குமார் ஏராளமான பொதுமக்கள் கலந்து பலர் கலந்து கொண்டனர்.

# வாசுதேவநல்லூர் சிறப்புப் பள்ளி மாணவர்களுக்கு மகிழ்ச்சியூட்டும் சுற்றுலா



தென்காசி மாவட்டம் வாசுதேவநல்லூரில் மகாத்மா காந்திஜி சேவா சங்கத்தின் கீழ் இயங்கி வரும் பத்மஸ்ரீ டாக்டர் சிவந்தி ஆதித்தனார் மனவளர்ச்சி குன்றியோர் சிறப்புப் பள்ளி சார்பில், பள்ளியில் பயிலும் மாணவ-மாணவியர்களின் மகிழ்ச்சியை அதிகரிக்கும் வகையில் சுற்றுலா நிகழ்ச்சி நடைபெற்றது.

இதில் மாணவ-மாணவியர்கள் மற்றும் ஆசிரியர்கள் குண்டாறு அணைக்கட்டு,நீர்வீழ்ச்சி உள்ளிட்ட சுற்றுலா தலங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். மேலும், மாணவர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டு இயற்கை அழகை ரசித்து மகிழ்ந்தனர்.

நிகழ்ச்சியில் பள்ளி தாளாளர் தவமணி, தலைமை ஆசிரியர் சங்கரசுப்பிரமணியன், சிறப்பு ஆசிரியர்கள் சாந்தி, ஹொலன், இவாஞ்சிலின், உதவி ஆசிரியர்கள் பூமாரி, சுடலி, பணியாளர்கள் அருண்குமார், கவிதா, குருவம்மாள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். சுற்றுலா நிகழ்ச்சிக்கான அனைத்து ஏற்பாடுகளையும்பள்ளிநிர்வாகம் சார்பில் சிறப்பாக செய்திருந்தனர்.

மாணவர்களின் மகிழ்ச்சிக்கும் மனநல மேம்பாட்டிற்கும் இத்தகைய சுற்றுலா நிகழ்ச்சிகள் பயனுள்ளதாக அமைந்ததாக ஆசிரியர்கள் தெரிவித்தனர்.

# கோவையில் ஆங்கர் ஸ்போர்ட்ஸ் வேர்ல்டு சார்பாக மாவட்ட அளவிலான செஸ் போட்டி: 500க்கும் மேற்பட்டோர் பங்கேற்பு



கோவை சின்னவேடம்பட்டி பகுதியில் ஆங்கர் ஸ்போர்ட்ஸ் வேர்ல்டு மற்றும்கோவைமாவட்ட சதுரங்க சங்கம் இணைந்து முதன்முறையாக மாவட்ட அளவிலான செஸ்போட்டி நடைபெற்றது. கோவை மாவட்ட சதுரங்க கழக செயலாளர் தனசேகர் அறிவுறுத்தலின் பேரில் போட்டிகள் நடைபெற்றன..

முன்னதாக போட்டிகளுக்கான துவக்க விழா ஆங்கர் ஸ்போர்ட்ஸ் வேர்ல்டு இயக்குனர்கள் நித்யானந்தன் மற்றும் திவ்யா ஆகியோர் தலைமையில் நடைபெற்றது..

இதில் சிறப்பு விருந்தினராக சர்வதேச நடுவர் விஜய ராகவன் கலந்து போட்டிகளை துவக்கி வைத்தார்..

இதில் ஆங்கர் செஸ் அகாடமி பயிற்சியாளர் ரஞ்சித்,மற்றும் நடுவர்கள் வினோத் குமார்,சந்தீப்,தீபன்,உள்ளிட்டோர் உடனிருந்தனர்.. ஆங்கர் ஸ்போர்ட்ஸ் வேர்ல்ட் வளாகத்தில் நடைபெற்றஇதில்,பள்ளி, கல்லூரி மாணவர்கள் தொடங்கி பெரியவர்கள் வரை 500-க்கும் மேற்பட்டோர் ஆர்வத்துடன் பங்கேற்றனர். 7 வயதுக்குட்பட்டோர், 10 வயதுக்குட்பட்டோர், 13 வயதுக்குட்பட்டோர், 16 வயதுக்குட்பட்டோர் மற்றும் பொதுப்பிரிவு என பல்வேறு பிரிவுகளில் போட்டிகள் நடைபெற்றன.

போட்டியாளர்களின் வயதிற்கு ஏற்ப பல்வேறு சுற்றுகள் நடத்தப்பட்டன.

போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு கோப்பைகள்,பதக்கங்கள் மற்றும் ரொக்கப் பரிசுகள் வழங்கப்பட்டன. 7 வயதுக்குட்பட்டோர் பிரிவில் பங்கேற்ற அனைத்து மாணவர்களுக்கும் பதக்கங்கள் வழங்கப்பட்டன. மாணவர்கள் மட்டுமின்றி பெரியவர்களும் ஆர்வத்துடன் பங்கேற்றதன் மூலம், கோவையில் சதுரங்க விளையாட்டின் மீதான ஆர்வம் அதிகரித்து வருவது குறிப்பிடத்தக்கது..

# ஆசிரியர் தகுதித் தேர்வில் இருந்து விலக்கு அளிக்கும் தீர்மானம் சட்டப்பேரவையில் ஒருமனதாக நிறைவேற்றம்

## தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு சார்பில் நிறுவனத்தலைவர் சா.அருணன் நன்றி



23.08.2010-க்கு முன்னர் பணியில் சேர்ந்த இடைநிலை மற்றும் பட்டதாரி ஆசிரியர்கள் அனைவரும் பணியில் தொடர கட்டாயம் தகுதித் தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும் என்ற உச்சநீதிமன்றத் தீர்ப்பு, ஒட்டுமொத்த ஆசிரியர்களுக்கும் பெரும் அதிர்ச்சியாகவும் இடியாகவும் இருந்தது. அதாவது, பதவி உயர்வுக்குத் தகுதித் தேர்வில் தேர்ச்சி அடைந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கிப் பதவி உயர்வு வழங்க வேண்டும் என வழக்கு தொடரப்பட்ட நிலையில், உச்சநீதிமன்றம் பதவி உயர்வுக்கு மட்டும் அல்லாமல், ஆசிரியர் பதவியில் தொடரவும் தகுதித்-தேர்வு கட்டாயம் எனத் தீர்ப்பு வழங்கியது.

இதன்படி, ஓய்வு பெற ஐந்து ஆண்டிற்கு மேல் உள்ளவர்கள் மூன்று ஆண்டிற்குள் தகுதித் தேர்வு எழுதித் தேர்ச்சி அடைய வேண்டும் எனவும், தேர்ச்சி அடையாதவர்களுக்குக் கட்டாய ஓய்வு எனவும், ஓய்வு பெற ஐந்து ஆண்டிற்குள் இருந்தால் தகுதித் தேர்வு கட்டாயம் இல்லை எனவும், அதேநேரம் பதவி உயர்வு கோரினால் கட்டாயம் தகுதித் தேர்வில் தேர்ச்சி அடைய வேண்டும் எனவும் தீர்ப்பு வழங்கப்பட்டது.

இதை அடுத்து, தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு உள்ளிட்ட அனைத்து சங்கங்களின் பிரதிநிதிகளையும் அழைத்து ஆலோசனைகள் கேட்கப்பட்டு, பணியில் இருக்கும் இடைநிலை மற்றும் பட்டதாரி ஆசிரியர்களுக்குச் சிறப்புத் தகுதித் தேர்வு நடத்த உத்தேசிக்கப்பட்டது. ஆண்டிற்கு இரண்டு முறை சிறப்புத் தகுதித் தேர்வு என அறிவிக்கப்பட்டு, கடந்த ஜூலை மாதம் சிறப்புத் தகுதித் தேர்வு நடத்தப்பட்டது. ஆனாலும், தேர்வில் வேலைநாடுநர்களுக்குக் கேட்கப்படும் கேள்விகள் மிகக் கடினமாக இருந்தன.

இந்தச் சூழலில்தான், மாண்புமிகு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் ஆ. ராஜ்மோகன் அவர்கள் மீண்டும் தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு உள்ளிட்ட அனைத்து சங்கங்களின் நிர்வாகிகளையும் வரவழைத்து ஆலோசனைகளைக் கேட்டறிந்து, குறிப்பெடுத்து ஒரு நல்ல முடிவை அறிவிப்பதாகத் தெரிவித்தார். அதன் விளைவாக, இன்று சட்டப்பேரவையில் தமிழ்நாடு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் மாண்புமிகு ஆ. ராஜ்மோகன் அவர்கள் தனித் தீர்மானமாகக் கொண்டுவந்தார்.

அதன்படி, 23.08.2010-க்கு முன்னர் பணியில் சேர்ந்த இடைநிலை மற்றும் பட்டதாரி ஆசிரியர்களுக்குத் தகுதித் தேர்வில் இருந்து முழுவதுமாக விலக்களிக்க வேண்டும் எனத் தீர்மானம்கொண்டுவந்துள்ளார். இந்தத் தீர்மானத்தைத் தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு பெரிதும் வரவேற்கிறது.

இந்தத் தீர்மானத்தை ஏற்று, தேசியக் கல்விக் குழுமம் நாடாளுமன்றக் கூட்டுக்குழுவிற்கு அனுப்பி, ஒன்றிய அரசு சட்டத்திருத்தத்தைக் கொண்டுவந்து, தமிழ்நாட்டில் உள்ள 1 லட்சத்து 75 ஆயிரம் பேரின் வாழ்வாதாரத்தையும், இந்தியா முழுவதும் உள்ள சுமார் 20 லட்சம் இடைநிலை ஆசிரியர்கள் மற்றும் பட்டதாரி ஆசிரியர்களின் வாழ்வாதாரத்தையும் நிலைநிறுத்த வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறோம்.

இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அவர்களுக்கும், தீர்மானத்தை ஆதரித்த தி.மு.க., அ.தி.மு.க., காங்கிரஸ், பா.ம.க., வி.சி.க., இடதுசாரி கட்சிகள் உள்ளிட்ட அனைத்துக் கட்சிகளுக்கும் தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், தமிழ்நாடு அரசு மற்ற மாநிலங்கள் பின்பற்றுவதைப் போன்று, பணியில் இருக்கும் ஆசிரியர்களுக்கு நடத்தும் சிறப்புத் தகுதித் தேர்வில் 40 விழுக்காடு மதிப்பெண் எடுத்தால் தேர்ச்சி என நிர்ணயிக்க வேண்டும். மேலும், பணிமூப்பு மற்றும் மேற்படிப்பிற்கு 10 விழுக்காடு மதிப்பெண்ணும், ஆசிரியர்களின் கற்பித்தல் திறன் செய்முறைக்கு 10 விழுக்காடு மதிப்பெண்ணும்,எழுத்துத் தேர்விற்கு 20 விழுக்காடு மதிப்பெண்ணும் வழங்கி அனைவரையும் தேர்ச்சி அடையச் செய்ய வேண்டும் எனத் தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு சார்பில் கேட்டுக் கொள்கிறேன்.

சா. அருணன் நிறுவனத் தலைவர் தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு



மதுரைமாவட்டம்ஞானஒளிபுரம்புனிதபிரிட்டோமேல்நிலைப்பள்ளியில்பள்ளிக்கல்வித்துறைசார்பில், நடைபெற்ற கலைத்திருவிழாவில், கலந்து கொண்டு, மாணவர்களின் கலைத்திறமைகளை பார்வையிட்டு, மாணவர்களுடன் கலந்துரையாடினார். 2026–2027ஆம் ஆண்டிற்கான கலைத்திருவிழா "இளையோர் திறன்" என்ற மையக்கருத்தில் நடைபெறுகிறது. 9–10 மற்றும் 11–12ஆம் வகுப்பு மாணவர்களுக்கான மாவட்ட அளவிலான போட்டிகள் மதுரை மாவட்டத்தில் 3 மையங்களில் நடைபெற்றன. புனித பிரிட்டோ மேல்நிலைப்பள்ளியில் 11–12ஆம் வகுப்பு அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளி மாணவர்களுக்கான போட்டிகள் நடைபெற்றன. இதில் மாணவர்கள் பாடல், நடனம், ஓவியம், நாடகம்,இலக்கியம்உள்ளிட்டபல்வேறுபோட்டிகளில்ஆர்வத்துடன்பங்கேற்றுதங்களதுதிறமைகளைவெளிப்படுத்தினர்.

# Four Indian firms among those sanctioned by US for Iran oil trade amid 'Operation Economic Outcast'



This came a day after US announced 'Operation Economic Outcast', which involves new sanctions that aim to block all potential sources of revenue for Iran. With the US treasury department unveiling new sanctions aimed at isolating Iran's economy, four Indian firms were among those targeted.

The companies, and Indian nationals associated with them, were sanctioned for importing petroleum and petrochemical products from Iran, according to a press release by the US state department.

This came a day after US treasury secretary Scott Bessent announced 'Operation Economic Outcast', which involves new sanctions that aim to block all potential sources of revenue for Iran. Bessent said the campaign aimed at severing Iran's financial lifelines, and broadens the risk of secondary sanctions for entities which continue to do business with Iran, PTI news agency reported.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.